1987 நவம்பர் 16]

திரு. இ. மனோகரன் : உங்களிடம் கொடுத்தால் என்ன உங்கள் செயலாளரிடம் கொடுத்தால் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செயலாளர் அனுமதி வழங்க முடியாது. நான் தான் வழங்க முடியும். இதற்கு அனுமதி இல்லை என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன் உங்களிடம் (குறுக்கீடு). இதைப் பற்றி நீங்கள் தினமும் கொடுத்துக் கொண்டு வருகிறீர்கள். ஒரு நேரம் தள்ளுபடி யானால் இன்னொரு நேரம் கொடுக்கக் கூடாது என்று ''ரெஸ்ஜுடிகேட்டா'' இங்கே கொண்டு வரவேண்டியதுதான்.

(ஆ) சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத்தலை வர் அவர்களே, இன்று சபை நடவடிக்கையில் ஏறத்தாழ 8 சட்ட முன் வடிவுகள் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றன. சட்ட முன் வடிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டால் 5 நாட்கள் தவணை கொடுக்க வேண்டும் என்ற ஒரு முறை இருப்பதாக நான் அறிகிறேன். ** மறுநாளே சட்ட முன் வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறீர்கள். இது சரிதானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதிக்கப்பட்டு, இன்றைக்கு அரசு அலு வல்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று எல்லோரும் ஒத்துக் கொண்டதுதான். இந்த 5 நாட்களைப் பற்றி அங்கே நீங்கள் சொல்லவில்லை. (குறுக்கீடு),** இதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதித்த பிறகு இங்கே விவாதிப்பது முறையல்ல. அங்கேயே ஒத்துக் கொண்ட விவகாரங்கள்தான் இவைகள். (குறுக்கீடு), இதற்கு நாம் என்ன செய்ய முடியும். நீங்கள் உட்கார்ந்து படிக்க வேண்டும். உங்களுக்கு டியூசன் சொல்லித் தர முடியுமா? அமருங்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : நீங்கள் அதைச் சொல்ல வேண்டாம் சார். 5 நாள் டைம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் இது பற்றி பேசி யாகிவிட்டது. அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதித்தாகி விட்டது. உங்களுக்கும் நான் சொல்லி விட்டேன். (குறுக்கீடு).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(அ) இலங்கையில் போர்நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை குறித்து —தொடர்ச்சி.

திரு. கி. மனோகரன் : நாடாளுமன்றத்திலே, நான் எழுப்பியதைப் பற்றி விவாதிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாடாளுமன்றத்திலே பதில் சொல்வதற்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள். இது வெளி விவகாரத் துறை சம்பந்தப்பட்டது.

திரு. கி. மனோகரன் : நீங்கள் அலவ் பண்ண மாட்டீர் களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அலவ் பண்ண வில்லை. இதைப் பற்றியெல்லாம் என்னிடம் கேட்க வேண் டாம். என் சம்பந்தப்பட்டவற்றை மட்டும் கேளுங்கள். ஏற் கனவே இதைப் பற்றி உங்களிடம் நான் சொல்லிவிட்டேன்.

திரு. கி. மனோகரன் : எனக்கு பாதுகாப்பு நீங்கள்தானே, வேறு யார் இருக்கிறார்கள் ? உங்களிடம் தான் கேட்க முடியும். (குறுக்கீடு). இவ்வளவு பெரிய முக்கியமான பிரச்சினை பற்றிப் பேசக்கூடாது என்று சொல்கிறீர்களா ? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போகிறவர்கள் நேராகப் போய் விடலாம். நான் ஏற்கெனவே உங்களிடம் சொல்லி யிருக்கிறேன். விவாதம் இல்லையென்று, (குறுக்கீடு). நீங்கள் காலையிலே கொடுத்து இருக்கிறீர்கள். அதற்கு அனுமதி பெறவில்லை. நான் பாயிண்ட் ஆப் ஆர்டருக்கும் அனுமதிக்க வில்லை.

(ஆ) சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்து — தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவேவ அலுவல் ஆய்வுக் குழுவில் நாம் விவாதித்து முடிவு எடுத்தது பற்றிப் பேச வேண்டாம். திரு. ஆறுமுகம் உட்காருங்கள். (குறுக்கீடு) ** இப்படிப் பேசுவது பாராளுமன்ற முறைக்கு, உண்மை யிலேயே உகந்தது அல்ல. அதை நீங்கள் பேசும் போதே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். ** நீங்கள் செய் வதைக் கூடச் சொல்லக் கூடாது. இது பாராளுமன்ற முறைக்கு உகந்தது அல்ல. ** அதைச் சொல்லக் கூடாது**என்று சொல்வது பாராளுமன்ற முறையல்ல. "You are supposed to know everything" அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுகிறேன். அது இருக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) உறுப்பினர் களுடைய தகுதியைக் குறைத்து விடாதீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.